# கார் விபத்து கோரல் தகவல்

நீங்கள் கார் விபத்து ஒன்றில் காயப்பட்டிருந்தால்

ஒன்டாரியோவில் கார் விபத்தில் உங்களுக்கு அடிபட்டிருந்தால், நீங்கள் உங்கள் காப்புறுதி நிறுவனத்திடமே சலுகைகளைக் கோர இயலும் ("விபத்து உதவிப்படிகள்" கோரல்). உங்கள் காயங்களுக்குப் பொறுப்பான எந்த ஒரு வண்டி ஓட்டுனருக்கு எதிராகவும் நீங்கள் சலுகைகளைக் கோர இயலும் ("தீங்கு" கோரல்கள்).

விபத்து உங்களால் ஏற்படாவிட்டாலும் கூட, உங்கள் காப்புறுதி நிறுவனம் தான் உங்கள் காரைப் பழுது பார்க்கும் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும், மற்ற வண்டி ஓட்டுனரின் காப்புறுதி நிறுவனம் அல்ல. விபத்திற்கு நீங்கள் பொறுப்பானால், மோதல்களுக்கு காப்பீடு அளிக்கும் காப்புறுதியை நீங்கள் வாங்கியிருந்தால், உங்கள் காப்புறுதி நிறுவனம் உங்கள் காரைப் பழுது பார்ப்பதற்கான செலவை ஏற்றுக்கொள்ளும்.

மேலும் எங்களுடைய தவறின்மை முறை, உங்களுடைய காப்புறுதி நிறுவனத்திடமே உதவிப்படிகள் கோருவதை அனுமதிக்கிறது. உங்களால் வேலைக்குப் போக இயலாவிடில், வேலை செய்யாத முதல் வாரத்திற்கு சம்பளம் கிடையாது. அதன் பிறகு, உங்கள் வருமானத்தில், விபத்திற்கு முன் இருந்த நான்கு - அல்லது 52 - வாரங்களின் சராசரி வருமானத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட வருமான சதவிகிதத்தை நீங்கள் கோர இயலும். நீங்கள் அதிக காப்பீடு அளிக்கும் காப்புறுதியை வாங்கவில்லை எனில், வருமானத்திற்கு மாற்றான உதவிப்படிகளுக்கு வாரத்திற்கு $400 டாலர்கள் மட்டுமே என்று வரையறுக்கப் பட்டுள்ளது. *

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*

**கார் விபத்து கோரல் தகவல்**

பணியின் வாயிலாக நீங்கள் ஊனக் காப்புறுதியை வைத்திருந்தால், காப்புறுதி அளித்த நிறுவனத்திடம் தான் நீங்கள் முதலில் உதவிப்படிகளைக் கோர வேண்டும்.

உங்கள் காப்புறுதி நிறுவனம் உங்கள் உடலியக்கப் பயிற்சி சிகிச்சை, வர்ம முறை சிகிச்சை, குத்தூசி சிகிச்சை, தேக உருவல் சிகிச்சை மற்றும் மருந்துகளுக்கான செலவுகளையும் ஏற்றுக்கொள்ளும். மீண்டும் கூறுகிறோம், உங்களுக்கு பணியின் வாயிலாக மருத்துவக் காப்பீடு வழங்கும் காப்புறுதியை

வைத்திருந்தால், அந்தக் காப்புறுதி நிறுவனத்திடம் தான் நீங்கள் முதலில் செலவுகளைக் கோர வேண்டும்.

ஆயினும், பொதுவாகவே காப்புறுதி அளிக்கும் நிறுவனம், வருமான மாற்று உதவிப்படிகள் மற்றும் மருத்துவச் செலவுகள் உள்ளிட்ட உதவிப்படிகளுக்கான கோரல்களை, உங்கள் காப்புறுதி நிறுவனத்தின் மருத்துவர் அவற்றுக்கு நீங்கள் தகுதி உடையவர் என்று கருதவில்லை என்றால் அளிக்க மறுப்பது பொதுவானதாகும்.

உங்கள் விபத்து உதவிப்படிகளுக்கான கோரல்களில் வெற்றிபெற உதவுவதற்கு நீங்கள் ஒரு வழக்கறிஞரையோ அல்லது சட்ட உதவியாளரையோ அமர்த்துவதற்கு விரும்பலாம் அல்லது விரும்பாமல் இருக்கலாம். பொதுவாகச் சொல்லப்போனால், வழக்கறிஞர் அல்லது சட்ட உதவியாளருக்கு நீங்கள் பெறக்கூடிய உதவிப்படிகளில் குறிப்பிட்ட சதவிகிதத்தை அளிக்க வேண்டியிருக்கும். இதற்கு எண்ணற்ற ஆவணங்களைக் கையாள வேண்டியிருக்கிறது. உங்களுக்கு இதில் சிரமம் ஏதும் இல்லை என்றால், நீங்களே

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*

**<u>கார் விபத்து கோரல் தகவல்</u>**

உங்கள் உதவிப்படிகளுக்காக கோரலாம். ஆயினும், எங்கள் அனுபவத்தில், பெரும்பாலான நபர்கள் உதவிப்படிகளைக் கோர முயலும்போதே தங்கள் சார்பாக தகுதியானவரை அமர்த்துவது தான் பயன் தருகிறது. காப்புறுதி அளிக்கும் நிறுவனம் சலுகைகளை மறுத்தவுடன், அதை மத்யஸ்தத்திற்கு கொண்டு செல்ல ஒரு பிரதிநிதியை அமர்த்துவதற்கு நீங்கள் இது வரை முயலவில்லை என்றில் நீங்கள் அநேகமாக அதற்கு முயலலாம்.

மற்ற வண்டியின் ஓட்டுனர் தவறு செய்திருந்தால், உங்களுடைய வருமானத்தின்இழப்புக்காக உங்கள் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெறும் வருமான மாற்று உதவிப்படியான $400 டாலர்களுக்கு அதிகமான தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் அவர் உங்களுக்கு தர வேண்டி நீங்கள் வழக்கு தொடரலாம். *சரி செய்ய முடியாத உருமாற்றம் (உ.ம். தழும்பு) உங்களுக்கு உண்டாகி அதனால் ஏற்பட்ட வலி மற்றும் வேதனைகளினால், நீங்கள் உங்களுடைய முறையான பணி அல்லது வழக்கமான தினசரி அலுவல்களுக்கு காலவரையில்லாமல் திரும்ப முடியாத நிலையில் இருந்தால், நீங்கள் அந்த வண்டி ஓட்டுனர் மீது வழக்கு தொடரலாம். *பொதுவாக இந்த உதவிப்படிகளை விபத்து நடந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் கோரலாம்; இதற்காக உங்களுக்கு உதவுவதற்கு நீங்கள் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டியது அவசியமாகும்.

- *பொருளாதார இழப்பு மற்றும் விபத்து உதவிப்படிகள் குறித்து சிறப்பாக புரிந்துகொள்வதற்கு, எங்களுடைய இணையக் களத்தின் பதிவிறக்கங்கள் பக்கத்திலிருந்து பயனுள்ள விளக்கங்கள்-ஐ பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். ,*

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*